**பிரதேச அபிவிருத்தி வங்கி - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் (“வங்கி”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளக கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | SLFRSs ஐ ஏற்றுக்கொண்டதன் காரணமாக மேலதிக கணிப்பீடுகள் எழுந்தன. எனவே, நிதிக்கூற்றுக்களை மூடும் செயற்பாட்டின் போது பொதுப் பேரேடுகளிற்கு சீராக்கம் செய்யப்படாமல் பதிவுகள் நேரடியாக நிதிக்கூற்றுக்களிற்கு சீராக்கம் செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | SLFRSs தொடர்பான மேலதிக பணிகள் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காரணமாக ஏற்படும் மாற்றங்களுக்கு உட்பட்டு காலாண்டு ரீதியாக மற்றும் வருடாந்தம் செய்யப்படுகின்றன. எனினும், காலாண்டு ரீதியான மற்றும் வருடாந்தம் தொடர்பான நிதிக்கூற்றுக்களில் அந்த சீராக்கங்கள் கைமுறையாக சீர்செய்யப்படுகின்றன. கணக்காய்வு பூர்த்தியடைந்ததும், | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | அனைத்து பதிவுகளும் பொதுப் பேரேட்டில் பதியப்படுகின்றன. | |
| II. | தனித்தனியாக குறிப்பிடத்தக்க வாடிக்கையாளர்களுக்கு மத்திய பொறுப்பு அறிக்கை மற்றும் மீளாய்வு செயன்முறை கிடைக்காதமை தனிப்பட்ட நட்டக்கழிவு கணிப்பீட்டு செயன்முறையின் செயற்திறனைத் தடுக்கலாம். மேலும் அதற்கு மேலதிக மேம்பாடுகள் தேவைப்படுகின்றன. | உள்நாட்டில் உருவாக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கை MIS முறைமையில் சேர்க்கப்பட்டுள்ளது.<br><br>தனித்தனியாக குறிப்பிடத்தக்க கடன்கள் தொடர்பான கிளைகளிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மாத்திரமே நட்டக்கழிவு கணிப்பீட்டு செயன்முறை செய்யப்படுகிறது. | மையப்படுத்தப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கை நட்டக்கழிவு கணிப்பீட்டுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, நட்டக்கழிவு கணிப்பீட்டு செயன்முறையின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தரவு கைப்பற்றல் மற்றும் நட்டக்கழிவு மதிப்பாய்வுக்கான சரியான பொறிமுறையை நிறுவுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| III. | நிதிக்கூற்றுக்களானது பிழைகளைக் குறைப்பதற்காக ஒரு தனி குழு அல்லது ஒரு பிரிவால் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இது அடிக்கடி கணக்காய்வு சீராக்கங்கள் மற்றும் வெளிப்படுத்தல்களில் உள்ள பிழைகள் மூலம் தெளிவாகத் தெரிகிறது. | இது 2024 முதல் புதிதாக பணிக்கமர்த்தப்பட்ட உதவி பொது முகாமையாளருக்கு ஒதுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களின் சரியான தன்மையை சுயாதீனமாக சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்கு பயனுள்ள கட்டுப்பாடுகளை நிறுவுதல். |
| IV | இதே விளக்கத்தின் கீழ் பல பொது பேரேட்டு கணக்குகள் வங்கியால் உருவாக்கப்பட்டன, அவை தொடர்புடைய பேரேட்டு கணக்குகளுக்கு மீதிகளை பதிவுசெய்யும் போது குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. மேலும், சில வருமானக் கணக்குகள் தொடர்பாக கழித்தல் மீதிகள் அவதானிக்கப்பட்டன. | தகவல் தொழில்நுட்பப் பிரிவோடு ஒருங்கிணைத்து தொடர்புடைய பேரேட்டுக் கணக்குகளில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், முறைமை அமுல்படுத்தல் நிலை சிக்கல்கள் காரணமாக சில வருமானக் கணக்குகள் தொடர்பாக எதிர்மறை மீதிகள் உள்ளன. CBS விற்பனையாளரின் உதவியுடன் இந்தப் பிரச்சனை தீர்க்கப்பட்டு வருகிறது. | GL கணக்குகளை உருவாக்குவது தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | கடன்கள் மற்றும் பெறவேண்டிய வட்டியின் இறுதி மீதி தொடர்பாக கடன் பிரதான கோவையின் பிரகாரமான மீதிகளிற்கும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறிப்பு இல. 21 இன் கீழ் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 46,401,371 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரங்கள் **பின்னிணைப்பு I** இல் கொடுக்கப்பட்டுள்ளன. | இப்பிரச்சனையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | மேலும் தாமதமின்றி கணக்கிணக்கம் செய்யப்படாத பதிவுகளை கணக்கிணக்கம் செய்வதற்கும், நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| II. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகை (கையேடு) பிரதான கோவையின் நிலுவை மீதிகளுக்கும் பொதுப் பேரேட்டு மீதிக்கும் இடையே ரூபா 47,047,552 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.<br><br>**விபரம்** — **2023/12/31 இல் உள்ளவாறான மீதி (ரூபா)**<br>குத்தகை (கையேடு) பிரதான கோவை மீதி — 49,010,790<br>பொது பேரேட்டு மீதிகள் — 96,058,342<br>வேறுபாடு — -47,047,552 | GL A/c 115175110 (நிதிக் குத்தகை - LDB கையேடு) மற்றும் GL A/c 116100120 (நிதிக் குத்தகை - LDB கையேடு) ஆகியவற்றின் மீதியின் பிரகாரம் 2023.12.31 இல் உள்ளவாறான பொது பேரேட்டு மீதி 52,023,609/- ஆக இருந்தது. எனவே, பிரதான கோவைக்கும் GL இற்கும் இடையே உள்ள வித்தியாசம் இலங்கை ரூபா 3,012,819/- ஆக இருந்ததுடன் வங்கியின் குத்தகைப் பிரிவில் உரிய உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து வேறுபாட்டை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இந்த வேறுபாடுகள் LDB ஐ RDB உடன் இணைப்பதன் தொடக்க நிலையிலேயே உள்ளது. மேலும் 2024.12.31 இற்கு முன்னர் அதை பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்துள்ளது. | மேலும் தாமதமின்றி கணக்கிணக்கம் செய்யப்படாத பதிவுகளை கணக்கிணக்கம் செய்வதற்கும், நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

<table>
<tr><td>III.</td><td>2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ” NPL காரணமாக தொங்கலில் உள்ள வட்டி” (GL இல. 230110105) இன் GL கணக்கு தொடர்பாக பொதுப் பேரேட்டின் பிரகாரமான மீதிக்கும் பரீட்சைமீதியின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 42,429,586 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த வேறுபாடு முறைமையில் பதிவுசெய்யப்படாமல் கைமுறையாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.
<table>
<tr><th>விபரம்</th><th>2023/12/31 இல் உள்ளவாறான மீதி (ரூபா)</th></tr>
<tr><td>GL 230110105 இன் பிரகாரம் மீதி</td><td>7,885,042,851</td></tr>
<tr><td>பரீட்சைமீதியின் பிரகாரம் மீதி</td><td>7,927,472,437</td></tr>
<tr><td>வேறுபாடு</td><td>42,429,586</td></tr>
</table></td><td>பிரச்சனையை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.</td><td>மேலும் தாமதமின்றி கணக்கிணக்கம் செய்யப்படாத பதிவுகளை கணக்கிணக்கம் செய்வதற்கும், நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.</td></tr>
<tr><td>IV.</td><td>செயற்பாடற்ற கடன்களுக்கான தொங்கலில் உள்ள எதிர் வட்டிக் கணக்குகளுக்கும், பொதுப் பேரேட்டின் பெறவேண்டிய வட்டி கணக்கிற்கும் இடையே 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்ட ரூபா 16,708,833 வேறுபாடு கடன்கொடுத்தோர் கணக்கிற்கு (GL இல.: - 230165100) மாற்றப்பட்டது.</td><td>எதிர் GL கணக்குகள் தொடர்பான GL கணக்குகள் கிளை மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றன, மேலும் பதிவு செய்யும் கொடுக்கல்வாங்கல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து எதிர் GL கணக்குகளும் உரிய காலத்தில் கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். எனவே, ஆண்டு இறுதி நிதி அறிக்கையிடல் செயன்முறையில் கடன்பட்டோர் அல்லது கடன்கொடுத்தோர் என வேறுபாடுகள் பதிவு செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக, உரிய காலத்தில் எதிர் GL கணக்குகளின் கணக்கிணக்கத்தை கருத்தில் கொண்டு, கிளைகளுக்குத் தெரிவிப்பதற்கு நிதிப் பிரிவு நடவடிக்கையை எடுக்கும்.</td><td>மேலும் தாமதமின்றி கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கை கணக்கிணக்கம் செய்வதற்கும் உரிய கணக்கில் உள்ள மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். அத்துடன் எதிர் கணக்குகள் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>மேலும், எதிர்-GL கணக்குகள் தொடர்பான வேறுபாடுகள் ஆண்டு இறுதி நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் அல்லது கடன்கொடுத்தோர் என நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக மாத்திரமே பரீட்சை மீதியில் பெயரளவு பதிவுகளாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் GL இல் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.</td><td></td></tr>
<tr><td>V.</td><td>எதிர் தொங்கல் வட்டி (குத்தகை) - கொவிட் 19 (GL இல. - 230110127) கணக்கிற்கும் பெறவேண்டிய வட்டி (குத்தகை) - கொவிட் 19 (GL இல. 130120116) பொதுப் பேரேட்டு கணக்கிற்கும் இடையே 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்ட ரூபா 5,898,846 வேறுபாடு கடன்பட்டோர் கணக்கிற்கு (GL இல.: - 140105105) மாற்றப்பட்டது.<br><br>
<table>
<tr><th>விபரம்</th><th>2023/12/31 இல் உள்ளவாறான மீதி (ரூபா)</th></tr>
<tr><td>தொங்கல் வட்டி (குத்தகை) - கொவிட் 19 (GL இல. - 230110127)</td><td>281,577</td></tr>
<tr><td>பெறவேண்டிய வட்டி (குத்தகை) - கொவிட் 19 (GL இல. 130120116)</td><td>6,180,424</td></tr>
<tr><td>வேறுபாடு</td><td>5,898,847</td></tr>
</table></td><td>எதிர் GL கணக்குகள் தொடர்பான GL கணக்குகள் கிளை மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றன, மேலும் பதிவு செய்யும் கொடுக்கல்வாங்கல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து எதிர் GL கணக்குகளும் உரிய காலத்தில் கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். எனவே, ஆண்டு இறுதி நிதி அறிக்கையிடல் செயன்முறையில் கடன்பட்டோராக வேறுபாடுகள் பதிவு செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக உரிய காலத்தில் எதிர் GL கணக்குகளின் கணக்கிணக்கத்தை கருத்தில் கொண்டு, கிளைகளுக்குத் தெரிவிப்பதற்கு நிதிப் பிரிவு நடவடிக்கையை எடுக்கும்.<br><br>மேலும், எதிர்-GL கணக்குகள் தொடர்பான வேறுபாடுகள் ஆண்டு இறுதி நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் அல்லது</td><td>மேலும் தாமதமின்றி கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கை கணக்கிணக்கம் செய்வதற்கும் உரிய கணக்கில் உள்ள மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். அத்துடன் எதிர் கணக்குகள் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>கடன்கொடுத்தோர் என நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக மாத்திரமே பரீட்சை மீதியில் பெயரளவு பதிவுகளாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் GL இல் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.</td><td></td></tr>
<tr><td>VI.</td><td>2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தகவல் தொழில்நுட்ப பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரதான கோவையின் பெறவேண்டிய தங்கநகை அடகு வட்டி மீதிக்கும் பொதுப் பேரேட்டு மீதிக்கும் இடையே பின்வரும் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.
<table>
<tr><th>விபரம்</th><th>2023/12/31 இல் உள்ளவாறான மீதி (ரூபா)</th></tr>
<tr><td>தகவல் தொழில்நுட்ப பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரதான கோவையின் பிரகாரம் பெறவேண்டிய வட்டி</td><td>4,104,398,724</td></tr>
<tr><td>பொதுப் பேரேட்டு மீதியின் பிரகாரம் பெறவேண்டிய வட்டி (126..,127….,129 ….,130….உடன் தொடங்கும் குறியீடு)</td><td>4,074,048,809</td></tr>
<tr><td>வேறுபாடு</td><td>30,349,915</td></tr>
</table></td><td>கணக்குத் தீர்க்கப்படாமல் இருக்கும் போது தங்கநகை அடகு முற்பணங்களிற்கான பகுதியளவு வட்டிக் கொடுப்பனவுகளை கிளைகள் ஏற்றுக்கொள்கின்றன. இந்த சந்தர்ப்பங்களில் கணக்கீட்டு பதிவுகள் சரியாக செயன்முறைப்படுத்தப்படுகின்றன. கணக்கு மூடப்படும் போது மீதமுள்ள வட்டியும் சரியாக அறவிடப்படுகிறது. எனினும், இந்த பகுதியளவிலான கொடுப்பனவுகளை பிரதிபலிக்கும் வகையில் தங்கநகை அடகு பிரதான பட்டியல் நாளதுவரையாக்கப்படுவதில்லை. இப்பிரச்சனையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.</td><td>மேலும் தாமதமின்றி கணக்கிணக்கம் செய்யப்படாத ஏடுகளை கணக்கிணக்கம் செய்வதற்கும், நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.</td></tr>
<tr><td>VII.</td><td>UNDP-RUEDA உத்தரவாத நிதி<br><br>றுகுணு பொருளாதார அபிவிருத்தி முகவராண்மை (RUEDA) ரூபா 34,124,900 தொகையை வங்கிக்கு 2009 இல் கடன் உத்தரவாத நிதியாக வழங்கியிருந்தது. 2013 ஆம் ஆண்டில் வங்கி ரூபா 23,121,157 தொகையை திருப்பிச் செலுத்தியிருந்தது, ரூபா 11,003,743 மிகுதி தொகை நாளதுவரை</td><td>பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ALCO இற்கு பத்திரமென்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ALCO வழங்கிய முடிவின் பிரகாரம் சிக்கல் சீர்செய்யப்படும்.</td><td>உரிய கணக்குகளில் உள்ள மீதிகளின் சரியான தன்மை மற்றும் உரிய மீதிகளை திருப்பிச் செலுத்துவதற்கான வங்கியின் கடப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு தேவையான</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| பொறுப்பொன்றாக தொடர்ந்திருந்தது.<br><br>பிராந்திய பொது முகாமையாளர் - தென் மாகாணத்தின் பிரதம நிதி அதிகாரிக்கான (CFO) 2020 மே 18 ஆம் திகதிய ஆர்டிபீ/எஸ்பி/எவ்சீ/8/49 ஆம் இலக்க உள்ளக விஞ்ஞாபனத்தின் பிரகாரம் RUEDA ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ளதால் ரூபா 23,607,260 தொகையான RUEDA இன் வட்டி ஏற்பாட்டை இலாபத்திற்கு சீராக்கம் செய்யுமாறு அவர்கள் கோரியுள்ளனர். எனினும், இலாப நட்டத்திற்கான வட்டித் தொகையை இனங்காண்பதற்கு நாளதுவரை வங்கியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | | நடவடிக்கைகளை எடுத்தல். |

**1.5.3 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **I. PEACE செயற்திட்டம் - GL 220105150** | | |
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு PEACE செயற்திட்ட நிதியின் GL மீதி ரூபா 44 மில்லியனாக இருந்தது, இது 2015 முதல் தொடர்கிறது. அந்த சர்வதேச கூட்டிணைவிற்கான ஜப்பான் வங்கியால் (JBIC) ஆண்டொன்றிற்கு 2 சதவீத வட்டி விகிதத்தில் கிராம மக்கள் மற்றும் விவசாய அமைப்புகளின் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குவதற்காக அந்த ரூபா 44 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. எனினும், எதிர்பார்த்த நோக்கத்திற்கு மானியம் பயன்படுத்தப்பட்டதற்கான சான்று கிடைக்கவில்லை. | ரூபா 44 மில்லியனில், ரூபா 7.5 மில்லியன் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபா 36.5 மில்லியன் புதிய கடன் திட்டத்தை அறிமுகப்படுத்திய பின்னர் பயன்படுத்தப்படும். நீர்ப்பாசனத் திணைக்களம் அனுப்பிய வரைவு உடன்படிக்கை சட்ட மற்றும் இணக்கக் கருத்துக்காக சட்ட மற்றும் இணக்க பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், புதிய கடன் திட்டம் 2024.10.31 இல் அல்லது அதற்கு முனனர் அமுல்ப்படுத்தப்படும். | ஒதுக்கப்பட்ட நிதியை தேவையான நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | முற்பண கொடுப்பனவு - ஏனையவை (140105240)<br><br>2018 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் தொடர்ந்து அறிக்கையிடப்பட்ட போதிலும் பின்வரும் முற்பணங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக கணக்குகளில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், நீண்டகாலமாக நிலுவையாக உள்ள முற்பண கொடுப்பனவு மீதிகளை தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் கணக்காய்வு திகதியான 2024 மார்ச் 18 வரை மாற்றமின்றி இருந்தது. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. | i, ii, iii, iv, v, vi. கட்டம் 3 இல் ஆட்சேர்ப்பு மற்றும் தொழில் இணையவாசல் தொகுதி மற்றும் கட்டம் 4 இல் ”கற்றல் முகாமைத்துவம்” தொகுதி என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எனினும், கட்டம் 3 இல் ”HR வணிக அறிவுத்திறன் மற்றும் அறிக்கையிடல்” தொகுதியும், கட்டம் 4 இல் ”ஊழியர் செயலாற்றல் முகாமைத்துவம்” தொகுதியும் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.<br><br>மென்பொருள் விற்பனையாளருடனான உடன்படிக்கையின் பிரகாரம், ஒவ்வொரு கட்டத்திலும் அனைத்து தொகுதிகளும் பூர்த்தியடைந்த பின்னரே முழுக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு தொகுதிக்கும் முழுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டவுடன், முற்பணக் கொடுப்பனவு கணக்கிலிருந்து தொகுதியின் செலவு தொடர்புடைய சொத்துக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.<br><br>vii, viii, ix, x.. ”சரக்கிருப்பு கட்டுப்பாட்டு முறைமை” இறுதி | எந்த காலதாமதமும் இன்றி செயற்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்து அதற்கிணங்க முற்பண கணக்கை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| | திகதி | கொடுப்பனவு விபரங்கள் | தொகை (ருபா) |
|---|---|---|---|
| i. | 09/11/2016 | HR முறைமை கட்டம் 3 செலவு முற்பண கொடுப்பனவு | 354,545 |
| ii. | 09/02/2017 | HRM முறைமை கட்டம் 04 இற்கான ஆரம்ப கொடுப்பனவு | 434,545 |
| iii. | 15/12/2017 | முற்பண கொடுப்பனவு 20% - மனிதவள முறைமை கட்டம் 04 | 434,545 |
| iv. | 26/07/2018 | HR முறைமை - கட்டம் 03 இற்கான 20% முற்பண கொடுப்பனவு | 354,545 |
| v. | 17/07/2019 | HR முறைமை - 20% SRS 4வது கட்டம் | 434,545 |
| vi. | 20/04/2020 | HR முறைமை நிறுவல் மென்பொருள் கட்டம் 3 | 354,545 |
| vii. | 01/12/2016 | சரக்கு கட்டுப்பாட்டு முறைமை மென்பொருள் முற்பண கொடுப்பனவு | 310,000 |
| viii. | 15/12/2017 | முற்பண கொடுப்பனவு 20% - சரக்கு கட்டுப்பாடு 02வது | 310,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவு | | |
| ix. | 15/12/2017 | முற்பண கொடுப்பனவு 20% - சரக்கு கட்டுப்பாடு 03 வது கொடுப்பனவு | 310,000 | வெளியீடு 2024 யூலை 02 இல் உற்பத்தி முறைமையில் பயன்படுத்தப்பட்டது. இந்த முறைமை தற்போது 3 மாத உத்தரவாதக் காலப்பகுதியின் கீழ் இயங்குகிறது. உத்தரவாதக் காலப்பகுதிக்குப் பின்னர், முற்பணக் கொடுப்பனவு கணக்கில் உள்ள தொகைகள் தொடர்புடைய சொத்துக் கணக்கிற்கு மாற்றப்படலாம். |
| x. | 30/12/2020 | சரக்கு கட்டுப்பாட்டு முறைமை - 04 வது கொடுப்பனவு | 310,000 | |
| xi. | 09/06/2020 | CBS CR கட்டண முற்பணம் 50% | 1,175,498 | xi. CBS CR பூர்த்தி செய்யப்பட்டு, CR இற்கான மொத்தச் செலவு 2024.08.20 இல் ”கணினிமயமாக்கல் செலவினங்களுக்கு” மாற்றப்பட்டது. |
| xii. | 02/07/2021 | 20% உடன்படிக்கை கைச்சாத்திடல் கட்ட முற்பணம் மற்றும் 10% GAP பகுப்பாய்வு & SRS ஆவணப்படுத்தல் முற்பணம் | 3,780,000 | xii. QR செயற்திட்டத்தின் கட்டம் 01 2021 திசெம்பர் முதல் நேரடி செயற்பாட்டில் உள்ளது. கட்டம் 02 இற்கு பயன்படுத்தப்பட்ட விண்ணப்பத்திற்கான UAT (பயனர் ஏற்றுக்கொள்ளல் சோதனை) உறுதிப்படுத்தலை பயனர் பிரிவு இன்னும் இறுதி செய்திருக்கவில்லை. UAT பூர்த்திசெய்யப்பட்டு வேலை பூர்த்திசெய்தல் அறிக்கையைப் பெற்றவுடன், முற்பண கொடுப்பனவு தீர்ப்பனவு செய்யப்பட்டு, சொத்துக் கணக்கில் மொத்தச் செலவினமும் சேர்க்கப்படும். |
| xiii. | 22/12/2021 | 10% SMS நுழைவாயில் தீர்வு கொடுப்பனவு முற்பணம் | 625,000 | |
| | **மொத்தம்** | | **9,187,768** | |

xiii. இந்த செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட SMS நுழைவாயில் 2022 சனவரி முதல் நேரடிச் செயற்பாட்டில் உள்ளது. தற்போது, CBS, D2D, QR, Just Pay மற்றும் ATM SMS விழிப்பூட்டல்கள் உள்ளிட்ட வங்கியின் SMS விழிப்பூட்டல்கள் முறைமை மூலம் அனுப்பப்படுகின்றன. விநியோகம் செய்யக்கூடிய இரண்டு உருப்படிகள், SMS வங்கி மற்றும் மல்டி டெல்கோ (Multi Telco) வசதிகள் விற்பனையாளரால் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த அம்சங்களின் வெற்றிகரமான விநியோகத்தை பயனர்கள் சரிபார்த்தவுடன், இறுதிக் கொடுப்பனவு செயன்முறைப்படுத்தப்படும். இரண்டு மைல்கற்களும் 2024 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல் தொழில்நுட்ப பிரிவின் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு வேலை பூர்த்திசெய்தல் அறிக்கை பெறப்பட்ட பின்னர் முற்பணம் தீர்க்கப்பட்டு, சொத்துக் கணக்கில் மொத்தச் செலவினமும் சேர்க்கப்படும்.

II. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதுப் பேரேட்டில் பின்வரும் நீண்டகாலம் நிலுவையாக உள்ள கடன்கள் மற்றும் பெறவேண்டிய மீதிகள் அவதானிக்கப்பட்டன.

மேலதிக தாமதமின்றி நீண்டகாலம் நிலுவையாக உள்ள பெற

| GL குறியீடு | கணக்கின் பெயர் | 2023.12.31 இல் உள்ளவாறான மீதி | கிளையின் பெயர்கள் | ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|
| 13012010 5 | பெறவேண்டிய வட்டி திவிநெகும SE கடன் | 2,358,872 | தலைமை அலுவலகம் | 2013 | சிக்கலைச் சீர்செய்வதற்கு ALCO இற்கு பத்திரம் சமர்ப்பிக்கப்படும். இந்த சிக்கல்களை 2024.12.31 இற்கு முன்னர் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | வேண்டிய மிதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| 13012513 0 | பெறவேண்டிய வட்டி தங்கக் கடன் - வணிகம் | 604 | திக்வெல்ல, மிஹிந்தலே | 2017 | | |
| 23016527 0 | பெறவேண்டிய வட்டி O/A குத்தகை தவணை கடந்தது | 308,877 | அனுராதபுரம், ஹிங்குராக்கொட, கதுருவெல | 2016 | | |
| 11610010 0 | பிராந்திய வங்கி கடன்கள் | 3,186,813 | வரகாபொல, செங்கடகல, வில்கமுவ, ஊவா, அலவ்வ, இப்பாகமுவ, மிஹிந்தலை, அனுராதபுரம், தம்புத்தேகம, கல்நேவ, தலாவ, வட மத்திய | 2019 | | |
| 11610010 5 | பணியாளர் விழா அட்வான்ஸ் | 12,000 | மேல் | 2016 | | |
| 11610011 0 | பிராந்திய வங்கி குத்தகை | 1,456,584 | வெலிகம, பெலியத்த, கம்புறுபிட்டிய, மாத்தறை நகரம், திக்வெல்ல, வடமேல், மிஹிந்தலை, அனுராதபுரம், தலாவ | 2019 | | |
| 12210010 0 | நிலுவையாக உள்ள | 2,679,542 | தம்புத்தேகம, கஹட்டகஸ்திகிலிய, | 2019 | | |

| | | | |
|---|---|---|---|
| குத்தைககள் | | கல்நேவ, மதவாச்சி, பொலன்னறுவை, மெதிரிகிரிய, ஹிங்குராக்கொட, கோனபத்திராவ, கலமுனை, அனுராதபுரம் புதிய நகரம், கதுருவெல | |
| மொத்தம் | 10,003,292 | | |

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| III. | 2022 திசெம்பர் 23 இல் பிடித்துவைத்தல் வரி (WHT) கழிப்பனவு தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல: எஸ்ஈசீ/2022/ஈ/03 இன் 7 ஆம் பிரிவின் பிரகாரம், WHT ஐ கழித்த ஒவ்வொரு பிடித்துவைத்தல் முகவரும் WHT கழிக்கப்பட்ட மாதம் முடிவடைந்து 30 நாட்களுக்குள் WHT சான்றிதழை வழங்க வேண்டும். எனவே, ஏனைய நிதி நிறுவனங்களால் கழிக்கப்பட்ட வட்டியில் WHT தொடர்பான WHT சான்றிதழ்களை வங்கி சேகரிக்கும். எனினும், நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 28 இன் பெறவேண்டியவை (க/கு இல.: 140105155) இன் கீழ் சேர்க்கப்பட்ட ரூபா 234,542,876 WHT பெறவேண்டிய மீதியுடன் தொடர்புடைய WHT சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான வங்கியின் உரிய முதலீட்டில் இருந்து WHT கழிக்கப்பட்டவுடன், உரிய நிதி நிறுவனங்களுக்கு WHT விலக்கு சான்றிதழ்கள் அனுப்பப்படவில்லை. எனினும், WHT சான்றிதழ்களை சேகரிப்பதற்காக உரிய நிதி நிறுவனங்களுக்கு கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | மேலதிக தாமதமின்றி WHT சான்றிதழ்களை சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | பின்வரும் பொதுப் பேரேட்டு (GL) கணக்கு மீதிகள் எந்தவொரு கொடுக்கல்வாங்கலும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு பொறுப்பாக முன்கொண்டு வரப்பட்டன. | 2024.12.31 இற்கு முன்னர் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br><br>ரணவிரு சேவா அதிகாரசபை | மேலதிக தாமதமின்றி நீண்ட காலமாக செலுத்த வேண்டிய நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் வேறுபாடுகளை கணக்கிணக்கம் செய்வதற்கும் |

| விபரம் | தொகை (ரூபா) | இறுதிக் கொடுக்கல் வாங்கல் திகதி | கிளை |
|---|---|---|---|
| 230100230-பீ வெங்காய | 1,857,543 | 01.02.2018 | HO(1000) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| களஞ்சியங்களுக்கான இயந்திர மானியம் | | | | | தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| 230100255- ரணவிரு திவிநெகும சுழற்சி நிதியம் | 213,772,526 | 27.03.2019 | HO(1000) | இந்த நிதியத்தை ஆரம்பித்த தரப்பினர் என்பதால் அவர்களுடன் கலந்துரையாடி நிதியைப் பயன்படுத்தி புதிய கடன் திட்டம் ஆரம்பிக்கப்படும். | |
| 230100365- NLB மற்றும் DLB கடன் பாதுகாப்பு நிதியம் | 686,700 | | | இந்த மீதியை 2024.12.31 இற்கு முன்னர் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| 230165415- செலுத்த வேண்டிய இழப்பீடு- LDB | 30,781,727 | 25.02.2021 | HO(1000) | | |
| **மொத்தம்** | **247,098,496** | | | இந்த GL இல் உள்ள மீதிகள், LDB ஐ RDB உடன் இணைப்பது தொடர்பாக எழுப்பப்பட்ட எந்தவொரு கடப்பாட்டையும் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | |

| | | | |
|---|---|---|---|
| II. | **GL 230165481 - எல்லை கணக்குகள் ரூபாய் வைப்புக்கள் (LDB)**<br>2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,259,234 மீதி மேற்படி கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது, இது LDB வாடிக்கையாளர்களிடமிருந்து அவர்களின் கடனை தீர்ப்பதற்காக பெறப்பட்ட தொகையைப் பிரதிபலிக்கிறது. எனினும், LDB வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட தொகைகளுக்கு எதிராக இந்தக் காலப்பகுதியில் எந்தவொரு எதிரீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் தொடர்புடைய கணக்கில் தோன்றிய மீதிகளை எதிரீடுசெய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. | இந்த சிக்கலை 2024.12.31 இற்கு முன்னர் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. | மேலதிக தாமதமின்றி நீண்டகால நிலுவை மீதிகளை எதிரீடு செய்வதற்கு/ தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| கிளை | தொகை (ரூபா) | இறுதிக் கொடுக்கல் வாங்கல் திகதி |
|---|---|---|
| நுகேகொட-1350 | 13,995,000 | 16.07.2020 |
| அம்பாந்தோட்டை-2380 | 268,960 | 06.10.2021 |
| கண்டி 2வது-4350 | 19,274 | 17.07./2020 |
| வென்னப்புவ-7360 | 772,000 | 17.07.2020 |
| கதுருவெல-8210 | 204,000 | 06.09.2021 |
| **மொத்தம்** | **15,259,234** | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,183,421,122 இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 359,115,329 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 824,305,793 தொகையான அல்லது 229 சதவீத முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது வட்டி வருமானம் மற்றும் கட்டணம் மற்றும் தரகு வருமானம் என்பன அதிகரித்தமை இவ் அதிகரிப்பிற்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான முக்கிய வருமான செலவின விடயங்கள் தொடர்பான பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளது.

| விபரம் | முரண் அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா மில்லியன்) | முரண் சதவீதம் | முரணிற்கான காரணம் |
|---|---|---|---|
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 765.5 | 95 | நினைவூட்டல் கடிதக் கட்டணங்கள், QR தரகு, தபால் கட்டணங்கள் மற்றும் நானாவித வருமானங்களின் அதிகரிப்பு. |
| தேறிய வர்த்தக ஆதாயம் (நட்டம்) | (337.25) | 330 | ஐ.அ.டொலர் 11 மில்லியன் தேறிய திறந்த நிலையை பேணுவது தொடர்பான ஐ.அ.டொலர் நாணயமாற்று விகிதத்தில் பாதகமான அசைவுகள். |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

துறை விகிதங்களுடன் சேர்த்து மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் முக்கிய சில விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதம் | துறை விகிதங்கள் (உரிமம் பெற்ற விசேட வங்கிகள்) சதவீதம் | 2023 சதவீதம் | 2022 சதவீதம் |
|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | |
| தேறியலாப விகிதம் (PAT) | 2.97 | 1.81 | 3.73 |
| தேறிய வட்டி எல்லை | 2.94 | 6.09 | 6.18 |
| வட்டி வருமானம் மீதான தேறிய வட்டி வருமானம் | 18.33 | 36.65 | 44.32 |
| மொத்த வருமானத்திற்கான வட்டி அல்லாத வருமானம் | 3.04 | 2.85 | 2.57 |
| வட்டி வருமானத்திற்கான வட்டி கிரயம் | 81.67 | 63.35 | 55.68 |
| செயற்பாட்டு செலவினங்களுக்கான பதவியணியினர் கிரயம் | 67.80 | 78.18 | 76.95 |
| சராசரி சொத்துகள் மீதான திரும்பல் (ROA) | 0.45 | 0.30 | 0.51 |
| உரிமை மீதான திரும்பல் (ROE) | 7.72 | 4.83 | 8.32 |
| பங்கொன்றிற்கான உழைப்பு | | 1.54 | 2.45 |
| **சொத்து தரம்** | | | |
| - நட்டக்கழிவிடப்பட்ட கடன்கள் (நிலை 3) விகிதம் (%) (நிலை 3 நட்டக்கழிவின் தேறியது) **(2022 முதல்)** | 10.59 | 8.80 | 6.53 |
| - நிலை 3 கடன்களிற்கான நட்டக்கழிவு (நிலை 3) விகிதம் (%) **(2022 முதல்)** | 34.01 | 36.03 | 31.95 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | **ஆகக்குறைந்த தேவைப்பாடு** | | |
| பொதுவான மூலதன அடுக்கு I மூலதன விகிதம் | 7 | 10.09 | 8.29 |
| மொத்த அடுக்கு I மூலதன விகிதம் | 8.5 | 10.09 | 8.29 |
| மொத்த மூலதன விகிதம் | 12.5 | 17.28 | 15.22 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | |
| நியதிச்சட்ட திரவ சொத்துக்கள் விகிதம் | 20 | 38.73 | 27.83 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | 2023 இல் வழங்கப்பட்ட ரூபா 17.9 மில்லியன் கடன்களின் மொத்த தொகையுடனான முப்பத்தேழு (37) கடன்கள் அதே ஆண்டில் மீளப்பட்டியலிடப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டன. | ஆரம்பத்தில், வாடிக்கையாளரை பரீட்சித்து, பின்னர் கடன் வாங்கியவர்களின் கோரிக்கை மற்றும் திருப்பிச் செலுத்தும் திறன் ஆகியவற்றின் | கடன்களை வழங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளர்களை சரியாக மதிப்பீடு செய்வதற்கு |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>சொத்து வகுப்பு</th><th>கணக்குகளின் எண்ணிக்கை</th><th>வழங்கப்பட்ட முதலின் மொத்தம் (ரூபா)</th><th>நிலுவைத் தொகையின் மொத்தம் (ரூபா)</th></tr>
<tr><td>A0</td><td>16</td><td>10,925,000</td><td>10,127,572</td></tr>
<tr><td>A1</td><td>17</td><td>3,230,000</td><td>2,881,341</td></tr>
<tr><td>B0</td><td>4</td><td>3,750,000</td><td>3,688,866</td></tr>
<tr><td>கூட்டுமொத்தம்</td><td>37</td><td>17,905,000</td><td>16,697,779</td></tr>
</table>
</td>
<td>அடிப்படையில் மீளப்பட்டியலிடப்பட்ட வசதிகளை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.</td>
<td>தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.</td>
</tr>
<tr>
<td>II.</td>
<td>2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 8,687 மில்லியன் தொகையுடன் கூடிய பதினேழாயிரத்து முந்நூற்று மூன்று (17,303) கடன்கள் அதே 2023 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறுள்ளன.
<table>
<tr><th>சொத்து வகுப்பு</th><th>கணக்குகளின் எண்ணிக்கை</th><th>வழங்கப்பட்ட முதலின் மொத்தம் (ரூபா)</th><th>நிலுவைத் தொகையின் மொத்தம் (ரூபா)</th></tr>
<tr><td>A0</td><td>17,144</td><td>8,627,761,339</td><td>7,618,134,957</td></tr>
<tr><td>A1</td><td>129</td><td>44,445,000</td><td>41,930,472</td></tr>
<tr><td>B0</td><td>25</td><td>12,335,000</td><td>11,705,599</td></tr>
<tr><td>C0</td><td>5</td><td>2,875,000</td><td>2,862,165</td></tr>
<tr><td>கூட்டு மொத்தம்</td><td>17,303</td><td>8,687,416,339</td><td>7,674,633,193</td></tr>
</table>
</td>
<td>85% கணக்குகள் முக்கியமாக மறுநிதியளிப்பு கடன் திட்டங்களில் வட்டி விகித மாற்றங்களுடன் தொடர்புடையவையாகும். மேலும் மீதமுள்ள 15% கடன் கால மாற்றங்கள், முதிர்வு திகதி மாற்றங்கள் மற்றும் அவற்றின் மூலம் வணிக நோக்கம் மற்றும் வாடிக்கையாளர்களின் கோரிக்கை மீதான காசுப்பாய்ச்சல்களின் உண்மையான முரண் போன்ற காரணங்களுக்காக மறுசீரமைக்கப்பட்ட கடன்களாக இனங்காணப்பட்டுள்ளன. மேலும் அந்தக் கடன்கள் தொடர்ந்து கடனை அறவிடுவதற்காக நெருக்கமாக கண்காணிக்கப்படுகின்றன.</td>
<td>கடன்களை வழங்குவதற்கு முனனர் வாடிக்கையாளர்களை சரியாக மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.</td>
</tr>
<tr>
<td>III.</td>
<td>GL-105100110-PB3 (014100180005589)<br>மேற்படி நடைமுறைக் கணக்கின் ரூபா 1,998,583 மீதி 2020 திசெம்பர் 24 முதல் எந்த கொடுக்கல்வாங்கலையும் கொண்டிருக்காமல் அல்லது முதலீட்டுக்குப் பயன்படுத்தப்படாமல் தொடர்ந்து</td>
<td>ALCO மற்றும் BOD அங்கீகாரங்களுக்கு உட்பட்டு</td>
<td>நடைமுறைக் கணக்குகளைப் பேணுவது தொடர்பான உள்ளக</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகிறது. | நடைமுறை கணக்கை மூடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| IV. | வாடிக்கையாளர்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்கும் போது கடன் தவணை தவறினால் வங்கிக்கு ஏற்படும் ஆபத்தை குறைப்பதற்கு போதுமான பிணைகள் வங்கியால் பெறப்பட வேண்டும். எனினும், 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு முதல் 25 NPL வாடிக்கையாளர்களுக்கான ரூபா 2,426.38 மில்லியன் தொகையான கடன்கள் நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 1,344.25 மில்லியன் மாத்திரமே அசையாச் சொத்திற்கு எதிராக பாதுகாக்கப்பட்டது. மேலும் இது மொத்த நிலுவையில் 55 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே, ரூபா 1,082.13 மில்லியனின் அறவிடும்தன்மை வங்கிக்கு கிடைக்கக்கூடிய பிணைகளின் வலிமை இல்லாததால் சந்தேகத்திற்கிடமாக உள்ளது. | பாதுகாப்பற்ற கடன்களில் 45% முக்கியமாக இலங்கை கைவினை சபை, மீன்பிடி சங்கம், உறுதிமொழிக் கடன்கள் மற்றும் LDB வழங்கிய கடன்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. நுண் மற்றும் பேரின சுற்றாடல் காரணிகளைக் கருத்தில் கொண்டு இந்தக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>எனினும், இந்த கடன்களை அறவிடுவதற்கு வங்கி தற்போது பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.<br><br>**இலங்கை கைவினை சபை** - வங்கியின் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், அரசாங்க நிறுவனங்களுக்கு எதிராக முதலில் வங்கியானது மற்றுமொரு அரசாங்க நிறுவனமாக சட்ட நடவடிக்கை எடுப்பது பொருத்தமானதல்ல. எனவே, அவர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் இலங்கை | கடன் தவணை தவறும் சூழ்நிலையில் போதுமான பிணைகள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

கைவினை சபையின் முகாமைத்துவத்திடம் கடனை செலுத்துவதற்கான முன்மொழிவை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. மேலும், கடன் பெறுபவரிடமிருந்து முன்மொழிவு பெறப்படாததால், கடனை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகளை வங்கி பின்பற்றும்.

**எக்சத் தீவார உதான த்ரிப்ட் & கிரெடிட் கோப் சொசைட்டி** - வங்கியின் சட்ட பிரிவானது, கடனுக்காக கிடைக்கும் தனிப்பட்ட உத்தரவாதங்களின் அடிப்படையில் சங்கத்தின் ஒவ்வொரு கடன் பெறுபவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கையை எடுக்கத் தொடங்கியுள்ளது.

மேலும், அடமானக் கடன்கள் இருந்ததுடன் தற்போது, கடன் பெறுபவர்களின் மோசடி நடவடிக்கைகளால் களஞ்சியங்களில் நெல் இருப்புக்கள் காணப்படவில்லை. எனவே, வங்கி கடன் பெறுபவர்களுக்கு எதிராக கிரிமினல் வழக்குகளை பதிவு செய்துள்ளது, அதேநேரம் கடன்களை

| | | | |
|---|---|---|---|
| | | அறவிடுவதற்காக அவர்களுக்கு மீள்பட்டியலிடல் வசதிகளை வழங்குகிறது.<br><br>மேலும், கடன் தவணை தவறும் போது கடனை அறவிடுவதற்கும் கடன் அங்கீகாரத்தின் போது போதுமான பிணைகளைப் பெறுவதற்கும் பிணையங்களின் முக்கியத்துவம் குறித்து கிளைகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| V. | ரூபா 5,563,554 கூட்டுமொத்தமான 5,169 எண்ணிக்கையிலான நிலையான வைப்புக்கள் பல ஆண்டுகளாக (2007 முதல்) வங்கியால் வட்டி செலுத்தப்படாமல் அல்லது புதுப்பிக்கப்படாமல் வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | பல கணக்குகள் சீர்செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ளவற்றை 2024.12.31 இற்கு முன்னர் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான வைப்புக்கள் தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| VI. | **GL-210100370 - மகாவலி கடன் (முன்னாள் LDB)**<br><br>2019 ஆகஸ்ட் 30 இல் உள்ளவாறு மகாவலி கடன் திட்டத்தின் மீதியாக லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியில் (LDB) வங்கி ரூபா 50,000,000 தொகையை பெற்றுள்ளது. இந்தத் தொகை 2023 திசெம்பர் 31 வரை தொடர்ந்திருந்ததுடன் அந்த திகதி வரை இந்த நிதியிலிருந்து வாடிக்கையாளர்களுக்கு எந்தக் கடன்களும் வழங்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | இந்த நிதியைப் பயன்படுத்துவதற்கு மகாவலி சுரக்கும் என்ற விசேட கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | வங்கி மற்றும் இறுதிப் பயனர்களின் உகந்த நன்மைக்காக நிதியைப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | 05 கிளைகளில் கடன் கோவைகளின் மாதிரி பரீட்சிக்கப்பட்ட போது பின்வரும் பொதுவான குறைபாடுகள் | கடன் கோவைகள் தொடர்பான இவ்வகையான சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கான சுற்றறிக்கை | அங்கீகரிக்கும் அதிகாரியின் நிபந்தனைகள், வெளியிடப்பட்ட |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டன.<br>• கடன் வழங்கலுக்குப் பின்னர் பரீட்சிப்பு அறிக்கை காணப்படாதமை.<br>• கடன் விண்ணப்பத்தில் முகாமையாளரால் கையொப்பமிடப்படப்பட்டிருக்க ாதமை.<br>• ஆவணங்கள் இல்லாதமை அல்லது உத்தரவாததாரருக்கான படிவம் 83 மற்றும் 84 போன்ற முழுமையடையாத ஆவணங்கள், இடர் முகாமைத்துவ அறிக்கை, வசிப்பிடத்திற்கான சான்று, உரிமையற்ற சான்றிதழ், நிலையான கட்டளை, வருமானத்தை சரிபார்ப்பதற்கான ஆதார ஆவணங்கள் போன்றவை. | அறிவுறுத்தல்கள் ஏற்கனவே கடன் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன. ஆவணம் தொடர்பான சிக்கல்கள் கடன் உருவாக்கல் முறைமை (LOS) மூலம் வரிசைப்படுத்தப்படுகின்றன. LOS செயற்பட்டு வருகிறதுடன் படிப்படியாக நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்.<br><br>மேலும், அதிக அளவிலான கடன்கள் கடன் நிர்வாக பிரிவு மூலம் வழங்கப்படுகின்றன, எனவே இந்த வகையான சிக்கல்கள் குறைக்கப்படும். | சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் கடன்களை வழங்குவதற்கும் அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். அத்துடன் கடன் பணவளிப்பிற்கு முன்னர் தேவையான அனைத்து ஆவணங்களையும் பெற்றுக்கொள்வதும் அத்தகைய ஆவணங்களின் முழுமைத்தன்மை மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| I. **பொது முகாமையாளர் பதவி**<br>2008 இன் 41 ஆம் இலக்க பிராந்திய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம், வங்கியின் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியை சபை நியமிக்கும். எனினும், கடந்த ஐந்தாண்டு கால கடிதங்களின் பிரகாரம், 2019 இற்குப் பின்னர் பிராந்திய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 26(4) ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தபட்சம் தொடர்ந்து 3 ஆண்டுகள் பதவியில் இருக்கக்கூடிய ஒரு பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியை நிரந்தர அடிப்படையில் நியமிக்க சபை தவறியிருந்தது. விபரங்கள் **பின்னிணைப்பு II** இல் கொடுக்கப்பட்டுள்ளன.<br><br>நிரந்தர அடிப்படையில் பொது முகாமையாளர் பதவி நீண்டகாலமாக வெற்றிடமாக உள்ளதால், நாளாந்த வங்கிச் செயற்பாடுகள் பாதிக்கப்படும் என்பது அவதானிக்கப்பட்டது. | விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட உள்ளது. எனினும், மனித உரிமைகள் ஆணைக்குழு விடயம் காரணமாக ஆட்சேர்ப்பு செயன்முறை நிலுவையில் உள்ளது. | குறிப்பிட்ட வங்கிச் சட்டம் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் வழிகாட்டல்க ளுக்கு இணங்க தேவையான நடவடிக்கைக ளை எடுத்தல். |

**3.4 தகவல் முறைமை**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | **பயனர் செயலிழக்கச் செய்தல் செயன்முறையில் குறிப்பிடத்தக்க தாமதங்கள்** அறிவுத்திறன் மத்திய வங்கியியல் முறைமைக்கான (Intellect Core Banking System) பயனர் செயலிழக்கச் செய்தல் செயன்முறையில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் காணப்பட்டன. **பின்னிணைப்பு III** இல் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. | கொடுக்கப்பட்ட பட்டியலில் உள்ள "முடக்கப்பட்ட திகதி" நிரலை ஒப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டமை தெரிகிறது. கடவுச்சொல் பல முறை தவறாக உள்ளிடப்படும் போது கணக்கு செயலிழக்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே, இந்த ஒப்பீட்டிற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய நிரல் கொடுக்கப்பட்ட பட்டியலில் உள்ள "அழிக்கப்பட்ட திகதி" ஆகும். | பயனரை செயலிழக்கச் செய்யும் செயன்முறையில் தாமதத்தைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| II. | **விசா வரவு அட்டை அமுல்ப்படுத்தல் செயற்திட்டம்** பெறுகை முடிவுகளில் முறையான மூலோபாய மதிப்பாய்வு இல்லாதது, அத்தகைய முடிவுகளை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் கிரய நலன் பகுப்பாய்வு, சாத்தியவள ஆய்வுகள் மற்றும் இடர் மதிப்பீடுகளை நடத்தாததன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. உதாரணம் - வங்கி தற்போது செயற்திட்டத்தை தொடங்கியுள்ள போதிலும் மொத்த கிரய நலன் பகுப்பாய்வு, சாத்தியவள ஆய்வு மற்றும் குறிப்பிட்ட செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதில் உள்ள இடர் மதிப்பீடு உள்ளடங்கிய விரிவான மதிப்பீடுகளுக்கு சான்று காணப்படவில்லை. அதே நேரம் முறையான மதிப்பீடு இல்லாமல் விசா வரவு அட்டைக்கு நகரும் போது வங்கி JCB வரவு அட்டைகளை கொள்வனவு செய்துள்ளது. | செயற்பாட்டின் போது கிரய-நலன் பகுப்பாய்வு, சாத்தியவள ஆய்வு மற்றும் இடர் மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கிய சபை பத்திரம் இணைக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட அமல்ப்படுத்தலிற்குப் பின்னர் சபை பத்திரம் அங்கீகரிக்கப்பட்டது. எனவே பெறுகை வழிகாட்டல் 2006 இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்ல்களுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். மேலும் வங்கியின் நிதிகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை வலுப்படுத்துதல் மற்றும் இதுபோன்ற சிக்கல்கள் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்த்தல். |

*பின்னிணைப்பு I.*

| தயாரிப்பு | நிலுவையாக உள்ள மூலதனத் தொகை | நிலுவையாக உள்ள வட்டித் தொகை | காலக்கழிவிடப்பட்ட கிரயத் தொகை |
|---|---|---|---|
| லியா இசுர | 30,625,756 | 12,314 | 30,638,070 |
| வைப்புக்கு எதிரான கடன் | 13,410,935,326 | 643,361,609 | 14,054,296,935 |
| தங்கநகை அடகு | 41,292,788,532 | 3,988,314,125 | 45,281,102,657 |
| மீள்நிதி | 39,604,769,777 | 362,268,559 | 39,967,038,336 |
| பதவியணியினர் | 5,856,582,013 | 7,754,546 | 5,864,336,559 |
| பதவியணியினர் தங்கநகை அடகு | 282,666,176 | 17,722,378 | 300,388,553 |
| கால கடன் - விவசாயம் | 18,080,453,066 | 227,118,880 | 18,307,571,946 |
| கால கடன் - வணிகம் | 23,147,545,282 | 277,600,761 | 23,425,146,043 |
| கால கடன் - வீடமைப்பு | 43,893,563,068 | 338,825,944 | 44,232,389,013 |
| கால கடன் - கைத்தொழில்துறை | 14,544,786,067 | 147,208,988 | 14,691,995,055 |
| கால கடன் - ஏனையவை | 6,651,644,716 | 57,833,886 | 6,709,478,602 |
| குத்தகை | 856,508,495 | - | 856,508,495 |
| **பிரதான கோவையின் பிரகாரம் உபமொத்தம்** | **207,652,868,273** | **6,068,021,988** | **213,720,890,262** |
| பிராந்திய வங்கி தங்கநகை அடகு | 18,788,200 | - | 18,788,200 |
| குத்தகை கையேடு - LDB | 49,010,790 | | 49,010,790 |
| SME | 118,165,218 | - | 118,165,218 |
| கையேடு | 3,186,814 | - | 3,186,814 |
| பதவியணியினர் விழா முற்பணம் | 12,000 | | 12,000 |
| **கைமுறையிலான கடன்கள் மொத்தம்** | **189,163,022** | **0.00** | **189,163,022** |
| பெறவேண்டிய வட்டி கொவிட் 19 | | | 1,339,812,067 |
| பிரதான கோவை மற்றும் கையேடுகளின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன்கள் | | | **215,249,865,351** |
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடன்கள் - குறிப்பு 21 | | | **215,296,266,722** |
| **வேறுபாடு** | | | **-46,401,371** |

*பின்னிணைப்பு II*

| பெயர் | அடிப்படை | நியமனத் திகதி | பதவி விலகல் திகதி | சேவை காலம் |
|---|---|---|---|---|
| திரு.ரீ.ஏ.ஆரியபால | நிரந்தரம் | 2.10.2014 | 30.01.2019 | 4 ஆண்டுகள் 3 மாதங்கள் |
| திரு.ரீ.குஹன் | பதிற்கடமை | 01.02.2019 | 31.10.2019 | 9 மாதங்கள் |
| | நிரந்தரம் | 01.11.2019 | 01.11.2020 | 1 வருடம் |
| திருமதி. ஆர்.எம்.டி.கே.ரத்நாயக்க | பதிற்கடமை | 02.11.2020 | 31.01.2022 | 1 வருடம் 3 |

| பெயர் | அடிப்படை | நியமனத் திகதி | பதவி விலகல் திகதி | சேவை காலம் |
|---|---|---|---|---|
| | | | | மாதங்கள் |
| திரு.ஏ.எச்.எம்.எம்.பீ.ஜெயசிங்க | நிரந்தரம் | 01.02.2022 | 04.09.2022 | 7 மாதங்கள் |
| திரு.பீ.எஸ்.எதிரிசூரிய | பதிற்கடமை | 05.09.2022 | 28.02.2023 | 5 மாதங்கள் |
| திரு.ஏ.எச்.எம்.எம்.பீ.ஜெயசிங்க (மீண்டும் அறிக்கையிட்டு, தனது பதவியில் இருந்து முன்கூட்டியே ஓய்வு பெற்றார்) | நிரந்தரம் | 01.03.2023 | 19.03.2023 | 18 நாட்கள் |
| திரு.பி.சுமேத எதிரிசூரிய | பதிற்கடமை | 20.03.2023 | 05.06.2024 | 1 வருடம் & 2 மாதங்கள் |
| திரு. ஈ.ஏ.டி. ஜனிதா பிரியசாந்த | பதிற்கடமை | 06.06.2024 | To date | |

***பின்னிணைப்பு III***

| **பயனர் பெயர்** | **பயனர் ID** | **முடக்குதல் கொடியைப் பயன்படுத்துதல்** | **பயனர் முடக்குதல் திகதி** | **நிறுத்தப்பட்ட திகதி HR** | **தாமத நாட்கள்** |
|---|---|---|---|---|---|
| எம் ஐ எம் எஸ் பரீதா | 010818 | T | 10/10/2023 | 10/9/2023 | 1 |
| டி எம் குலசேனா | 010040 | S | 6/26/2018 | 4/28/2017 | 423 |
| எஸ் என் டபிள்யூ எம் ஜெயசிங்க | 010222 | T | 10/17/2018 | 4/28/2017 | 536 |
| எஸ் என் டபிள்யூ எம் ஜெயசிங்க | 010222 | T | 2/5/2020 | 4/28/2017 | 1012 |
| வி பி சி பிரியதர்ஷனி | 011904 | T | 2/6/2023 | 1/30/2023 | 6 |
| டி எம் குலசேனா | 010040 | S | 6/25/2018 | 4/28/2017 | 422 |